1970 மார்ச் 3]

கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து சங்கம் நடைமுறை மூலதனக் கடனின் கீழ் பெற்ற தொகை வகையில் அச் சங்கம் மத்திய வங்கிக்கு ரூ. 46,268 செலுத்த வேண்டியுள்ளது. 31—3—69 அன்றுள்ளபடி அதற்கு ஏற்பட்ட நிகர விரயம் ரூ. 20,815/-. இச் சங்கத்தைக் கலைத்துவிடக் கருதப்பட்டுள்ளது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டுக் கூட்டுறவு நெசவுத் தொழிலாளர் சங்கம், அந்தப் பக்கத்தில் இருக்கும் பட்டுத் தொழிலாளர்களுக்கு முக்கியமாக இருக்கும் காரணத்தால், இதை மறுபரிசீலனை செய்து, லாபகாமான அளவில் நடத்த அரசு முயற்சி செய்யுமா? மூடிவிடாமல் இருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நடத்துகின்றவர்கள் தரமான முறையில் விற்பனை செய்து லாபம் காட்டினால், அதை மூட வேண்டாம்.

தமிழகத்தில் புது சர்க்கரை ஆலைகள்

* 184 **விஞ.—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1969 ஜூன் மாதம் முடிய எங்கெங்கு சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

(இ) தனியார் துறையில் எத்தனை? கூட்டுறவுத் துறையில் எத்தனை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) விபரங்கள் பின்வருமாறு:—

தென் ஆற்காடு	நெல்லிக்குப்பம்
	பெண்ணடம்
	முண்டியம்பாக்கம்
	கள்ளக்குறிச்சி
செங்கல்பட்டு	படாளம்
வட ஆற்காடு	ஆம்பூர்
திருச்சிராப்பள்ளி	புகளூர்
	காட்டூர்
	பெட்டவாய்த்தலே
சேலம்	மோகனூர்
தர்மபுரி	திம்மளஉறல்லி
கோயம்புத்தூர்	கிருஷ்ணாபுரம்
	ஆப்பாகுடல்
மதுரை	நிலக்கோட்டை
	பாண்டியராஜபுரம்
தஞ்சாவூர்	வடபாதிமங்கலம்

(இ) தனியார் துறை 9

கூட்டுறவுத் துறை

[1970 மார்ச் 3

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத்தலைவர் அவர்களே, அனுமதி அளிக்கப்பட்டவை அனைத்தும் உறபத்தி தொடங்கி விட்டனவா? மொத்த கரும்பையும் பயன்படுத்திக் கொள்ளும் அளவிற்கு கரும்பாலைகள் தமிழகத்தில் உள்ளனவா? புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, புதிய டைரக்டர்கள் பொறுப்பேற்ற பிறகு ஆலைகள் லாபத்தில இயஙகுகின்றனவா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் துறை, கூட்டுறவுத் துறை இரணடும் இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் தருமபுரியில் உற்பத்தி தொடங்கவில்லை. நம்முடைய மாநிலத்திற்கு இன்னும் மூன்று ஆலைகள் வேணடும் எனறு கேட்டோம்; இரண்டு தந்திருக்கிறார்கள்; ஒன்று பரிசிலனையில் இருக்கிறது. தனியார் துறையில் பல ஆலைகள் லங்களுடைய டிபாசிட்டை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். மத்திய சர்க்காருக்கு நாம் சிபாரிசு செய்து கொடுத்திருக்கிறோம். இப்போதைக்கு இது போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலில் ஆம்பூர் ஆலைக்கு விஸ்தரிப்புக்கு அனுமதி அளித்ததாகச் சொன்னார்கள். அதன பலன் என்ன? அது ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுவது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விஸ்தரிப்புக் கொடுத்ததன் காரணத்தால், விரைவில் உற்பத்தி தொடங்குகிறது. கூட்டுறவு ஆலைகளிலேயே ஆம்பூர் ஆலைதான் நல்ல ஆலை. ஒரு சில ஆண்டுகளில் அதிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும், பொதுவாக அது சிறந்த முறையில் நடக்கிறது.

திரு. எஸ். ஜே ராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது பெரிய ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஷேர் கேபிடல் கொடுப்பவர்களிடத்தில் தான் எடுக்கிறார்கள். கரும்பு விவசாயிகளிடத்தில் தேக்கமாக இருப்பதால், எல்லோரிடத்திலும் இருந்து கரும்பு எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆலை நன்றாக நடைபெற வேண்டுமானால் கரும்பு அதிகமாகக் கிடைக்க வேண்டும். அதற்காகத்தான் அதன் பங்குதாரர்களாக நியமித்து, அவர்கள் அவசியம் கரும்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். பல ஆண்டுகளுக்கு முன்னால் கரும்பு கொடுப்பதற்கு ஆள் கிடைக்க வில்லை. ஆகவே, சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கையை அதிகப் படுத்தினால்தான் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படும்.